# அருள் ஒளி



## சிவத்தமிழ்ச்செல்வி நினைவாலயம்

தைமாத சிறப்பு மலர்

தை இதழ்

மலர் 65

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை
2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமிப்பட்டர் விழா

## தை அமாவாசை

## அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்குமத் தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே. 1

துணையும், தொழுந்தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும், பணிமலர்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங் குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கேஏ திருவே, வெருவிப்
பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்குஉற வாய மனிதரையே! 3

மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயுமென் புந்தி எந்நாளும் பொருந்துகவே 4

பொருந்திய முப்புரை, செப்புரை, செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதம்என் சென்னியதே. 5

சென்னியது உன்பொற் றிருவடித் தாமரைஏ சிந்தையுள்ளே
அன்னியது உன்திரு மந்திரம்ஏ சிந்தூர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது, என்றும் உந்தன் பரமாகம பத்ததியே! 6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2008 சர்வதாரி வருடம் கார்த்திகை

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மலர் 65
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74 NEWS/2006Y


# மன நலம் இழந்தோர் நலம் பெறுவோம்

மனநலம் என்பது மனித வாழ்வின் மிக முக்கிய ஆதாரம் ஆகும். எம்மண்ணில் போர் நிலைகொண்ட தன்மையால் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மனத் தளர்வு என்பது வாழும் சூழலைப் பொறுத்து மனிதனுக்கு ஏற்படுகிறது. மன நலம் பாதிப்பு என்பது மானிடம் தோன்றிய நாள்முதல் இவ்வுலகில் நிலவி வருவது. மனநலத்தைக் காக்க உதவுவது கடவுள் வழிபாடு. அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில் அம்பாளிடம் வரம் கேட்கும்போது மனம்பற்றிய வரத்தினையும் வேண்டுகின்றார்.

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் .............

என்று அடிகள் மனம் தளராமல் காத்தருளவேண்டுவதனை உணர்த்துகிறது. மனத்தளர்வால் மானிட வாழ்வின் மகிழ்ச்சியை இழந்தவர்கள் பலர். ஒருவரின் மனத்தளர்வு என்பது ஒருவரை மட்டுமல்ல அவர் சார்ந்த அனைவரையும் வேதனைப்படுத்துவது. இந்நிலையில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மிகப் பக்குவமாகப் பேணும் பண்பாடு எம் சமூகத்தில் பண்டுதொட்டு நிலவியுள்ளது. சித்தவைத்தியர்கள், ஆன்மீகப் பெரியவர்கள், பூசகர்கள் சமய நெறி முறைகளில் சில வைத்திய மரபுகளை, ஆலோசனைகளைப் பிரயோகித்து நோயாளரைப் பராமரித்து மீண்டும் சமூகத்தில் சராசரி மனித வாழ்வில் குறைவின்றி வாழ வழி வகுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சூழலில் நவீன வைத்திய வளர்ச்சியில் மனப் பாதிப்புக்குள்ளானவர்க்கான சிகிச்சைமுறைகள் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றமை யாவரும் அறிந்ததே. யாழ் குடாநாட்டில் தெல்லிப்பழை, மந்திகை போன்ற அரசினர் வைத்தியசாலைகள் இக்குறைபாட்டை போக்குவதற்கு உதவும் அரிய சேவை நிலையங்களாக விளங்குவது சிறப்புக்குரியது. இத்தகைய பல வைத்திய சாலைகளில் இன்று நோயாளர் தொகை அதிகரித்துச் செல்வது கண்கூடு.குறிப்பாக வாழ வேண்டிய வயதில் இளம் பெண்கள் பலர் மன நலப் பாதிப்பினால் அவதியுறுகின்றனர். மன நலத்துறை தொடர்பாக மன நலத்தறை பேராசிரியர் தயா சோமசுந்தரம் முதல் இன்றைய வைத்திய நிபுணர் சிவமோகன் வரை பல்வேறு முயற்சிகளால் நலம் குன்றியோரின் பாதிப்பை போக்கி வருகின்றனர். பல்வேறு உதவி வழங்கும் நிறுவனங்களை நாடி மன நலம் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு வைத்தியத்துறை சார்ந்தவர்கள் செய்யும் முயற்சி பாராட்டுக்குரியது. எம் மண்ணில் இந்நோயினால் பாதிப்புற்று கைவிடப்பட்டவர்கள் கவனிப்பாரற்று அலைபவர்கள் உறவினரால் ஒதுக்கப்படுபவர்கள் தொகை சமீபகாலமாக அதிகரித்து ச் செல்வதை யாவரும் அறிவோம். ஆலய வீதிகள், தெருக்களில் கைவிடப்பட்டவர்களை நாம் காண்கிறோம். கைதடி முதியோர் இல்லத்தில் இத்தகைய நிலையில் உள்ள 41பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக மாவட்ட சமூகநலத்துறை திணைக்களப் பணிப்பாளர் திரு. த. கிருபாகரன் அறிவித்துள்ளார். யாழ் மாவட்டத்தில் மனநோயால் கைவிடப்பட்டு ஆதரவற்றுத் தவிப்பவரைக் காப்பதற்கான சீரான நிலையம் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு மறு வாழ்வு கொடுக்க வேண்டியது அனைவரது கடமையாகும். மனநலம் தொடர்பாக பாதிக்கப்பட்டவரை ஆரம்பத்திலேயே வைத்திய ஆலோசனைக்கு ஆற்றுப்படுத்த வேண்டியது சமூகத்தின் பிரதான கடனாகும். ஆன்மீக உலகு, அறிவியல் உலகு அவசரமாக பாதிப்பால் அவதியுறுபவர்களுக்கு ஆறுதல் கொடுத்தல் காலத்தின் கட்டாய பணியாகும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மன்னித்தல், கருணை காட்டுதல், ஆற்றுப்படுத்தல் ஆகியன மனிதாபிமான செயற்பாடாகக் கருதி பேணுதல் நம் கடனன்றோ.

- ஆசிரியர்.


## சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**




**தொடர்புகளுக்கு,**
**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி
**021-22 6550**

**கண் வைத்திய நிபுனர்கள்:**
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr . சிவந்தா, 021- 222 3149**
யாழ் போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனை விசாரணை செய்து செயற்பட்டு இன்பம் பெறுவோம்

கலாநிதி திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

நாம் ஒவ்வொரு செயலையும் செய்ய ஆரம்பிக்கு முன்பாக, அச்செயல் பற்றி இறைவனை விசாரிக்கவேண்டும். அவ்வாறு அவனைக் கேட்டறிந்து அவனின் ஒப்புதலுடன் செய்யும் காரியங்கள் யாவும் இனிது நிறைவேறும். அத்துடன் அக்காரியங்கள் எல்லோருக்கும் இன்பம் தருவனவாயும், நன்மை பயப்பனவாயும் அமையும் என்பதும் உறுதி. அக்கருமங்கள் எவரையும் சிறிய அளவிலேனும் பாதிக்க மாட்டா. இறைவன் எல்லாம் அறிபவன். அல்லவா!. அவன் பேரறிவாளன். அவனுக்கு மேல் அறிவுள்ளவனைத் தேடியும் காணமுடியாது. இவை எல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் நாம் ஏன் இறைவனை அணுகி, அவனின் கருத்தை அறிந்து கொள்ளப் பின்நிற்கிறோம்.

நாம் எம் இச்சைப்படி செயற்படுவதால் சில கருமங்கள்தான் வெற்றியடைகின்றன; அதேவேளை பல கருமங்கள் தோல்வியில் போய் முடிவடைகின்றன. அத்துடன் பல காரியங்கள் பிறருக்கு இடையூறாகவும் அமைகின்றன. நாம் எம் விருப்பப்படி, எவர் சொல்லும் கேட்காமல் செயல்களை ஆற்றுவதற்கு எம்மிடமுள்ள அகந்தையும் மமதையும் தான் காரணம். இதனை ஆணவம் என்றும் சைவம் கூறும். ஆணவம் நமது அறிவை மறைத்து மழுங்கச் செய்யும் அபார ஆற்றல் படைத்தது. ஒவ்வொரு கணமும் எம்முடன் நீங்காது நின்று எம்மை இறைவனை அணுகவிடாது தடுப்பது இந்த ஆணவம். அதனாலேயே நாம் இறைவனின் கருத்தை விசாரித்து அறிய முடியாத நிலையில் உள்ளோம். அது எம்முடைய இயலாமையைக் காட்டுகின்றது. ஆனால் எம்மால் எல்லாம் இயலும் என்று ஆர்ப்பரிப்பதில் எவ்வித குறைச்சலுமில்லை.

எம்மிடமுள்ள "நான்" எனும் அகந்தை, எம்மை விட்டு அகலும்போதுதான் ஆணவத்துடனான எமது சேர்க்கை நீங்கும். அப்பொழுது அறிவுதோன்றும். இறைவன் நினைப்பு உண்டாகும். இறைவனை விசாரிப்போம். அவன்கருத்தை அறிந்து செயற்படுவோம். தீயதை விலக்குவோம். நல்லதைச் செய்வோம். எங்கும் இன்பம், எல்லோருக்கும் நலம், எங்கும் மகிழ்ச்சி, எங்கும் சாந்தம் என்னும் உயரியநிலை உண்டாகும். நான் பெரிது, நீ பெரிது என்று சண்டையிட்டுக் கொண்ட பிரம்மா, விட்டுணு ஆகியோர் முன்பு இறைவன் சோதியாகத் தோன்றினான். ஆனால் அவர்களால் பல்லாயிரம் வருடங்கள் தேடியும் அச்சோதியின் அடியையோ, முடியையோ கண்டு பிடிக்க முடியவில்லை. காரணம் அவர்களிடம் நீக்கமற நிறைந்திருந்த அகந்தையும் அகம்பிரமமும்தான். இதிலிருந்து நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கொள்ளும் பாடம், அகந்தை உள்ளவர்கள் கண்ணுக்கு ஆண்டவன் புலப்படமாட்டான் என்பதாகும்.

"மாலும் அயனும் காணாத நீதியே" என்று இறைவனை மாணிக்க வாசகர் விளிக்கின்றார். அகந்தை நீதியை மறைக்கும். நான்தான்சரி, மற்றையோர் பிழை என்பவர்க்கு நீதி எப்படித் தோன்றும். இன்று உலகில் நீதி இல்லை என்றால் மக்கள் ஆணவ வயப்பட்டுள்ளனர் என்பதுதான் பொருள்.

இறைவன்தான் நீதி, நீதியே இறைவன் என்பது சைவத்தின் நிலைப்பாடு. இறைவனை விசாரித்தல் என்றால் நீதியை விசாரித்தல் ஆகும். இறைவனின் கருத்தைக் கேட்டறிந்து ஒரு கருமத்தைச் செய்யவேண்டும் என்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடியது என்னவென்றால் நீதியின்படி நாம் கருமம் ஆற்ற வேண்டுமென்பதாகும். இந்த நீதி எங்கிருக்கின்றது, எங்கிருந்து அறிந்து கொள்ளலாம் என்பது அடுத்து எழும் வினாவாகும். இறைவனால் அருளப்பட்டதும் உணர்த்தப்பட்டதுமான வேதம், ஆகமங்கள் என்னும் புனித நூல்கள் இறைவன் உணர்த்த, அவன் அருளே துணையாகக் கொண்டு அருளப்பெற்ற தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைத் தோத்திர நூல்கள் திருமந்திரம் மற்றும் திருக்குறள் முதலிய நீதி நூல்கள், கந்த புராணம் போன்ற புராண நூல்கள், மெய்கண்ட சாத்திர நூல்கள் என்பவற்றிலிருந்தும் இறைவனின் கருத்தை அறிந்த ஞானிகள், முனிவர்களிடமிருந்து இறைவனின் திருக்கருத்துக்களையும், நீதி நெறி முறைகளையும் அறிந்து கொள்ள முடியும். இறைவன் எவ்வெவற்றை விரும்புகிறான்., எவற்றை விரும்பவில்லை என்பன இந்நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

எக்கருமத்தைத் தொடங்குவதற்கு முன்பும் விநாகரை வழிபட்டுத் தொடங்கவேண்டுமென்பது சைவமரபு இன்று அதனை வெறும் சடங்கு, சம்பிரதாயமாக மாற்றிவிட்டோம். உண்மையில் நாம் செய்யப்போகிற செயற்பாடுபற்றி முதலில் இறைவனின் கருத்தறிதல் , நீதி தெளிதல், ஒப்புதல் பெறுதல் என்பன உள்ளடக்கியதாக விநாயகனுக்குச் செய்யும் முதல் வணக்கம் அமைதல் வேண்டும். இதனை நாம் உணர்தல் அவசியம்.

"உன் சொந்த விருப்பு, வெறுப்புக்களைக் கட்டி மூலையில் வைத்துவிட வேண்டும். இறைவன் வேண்டுவது என்ன என்பதை விசாரித்து அறிந்து செயல்பட வேண்டும். அதுவே நீதியாகும். அவ்வாறு செய்தால் நமக்கு ஒரு பொல்லாப்புமில்லை" இதனை உணர்ந்து, ஒழுகி வாழ்வில் இன்பம் பெறுவோமாக.

உங்கள் அபிமான
"அருள் ஒளி"
கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச்செல்வி நினைவாலயம்

உலகம் போற்றும் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவாக ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் ஆலய மேற்கு வீதியில் நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது. தன் வாழ்வை சைவ சமயத்திற்கும், ஆதரவற்ற மக்களுக்கும் அர்ப்பணித்த தெய்வீகத்தாயின் அஸ்தியை ஒன்பது செம்புகளில் நவகோண அமைப்பில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இவ் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இந்துமதப் பெரியார்களின் சமாதிகள் பல்வேறு தத்துவ அடிப்படையில் அமைக்கப்படுவது வழக்கம். அவ்வகையில் சக்தி உபாசகராக விளங்கிய அன்னையின் நினைவாலயம் நவகோணத்தில் அமைதல் பொருத்தமென இந்தியாவில் உள்ள ஆன்மீக அறிஞர்களின் கருத்துக்கு ஏற்ப பிரமாண்டமான முறையில் நவகோணத்தில் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அஸ்தி பீடத்தின்மேல் அணையா விளக்குப் பொருத்தப்பட்டுள்ளது. எந்தவித உருவ அமைப்புமின்றி குத்துவிளக்கே தீப ஒளியாக இவ் நினைவாலயத்தில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. தியான வழிபாட்டுக்குப் பொருத்தமான வகையில் தியான வழிபாட்டுக்குரிய நினைவாலயமாக அன்னையின் ஆலயம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அன்னை அவர்களின் திருவுருவச்சிலை ஆலயத் தென் திசையில் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களால் அமைக்கப்பெற்ற திருமுறை மடத்துக்கு அருகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. புகழ்பூத்த கலைஞர் சிற்பி ரமணி அவர்களின் கைவண்ணத்தில் சிலை உருவாக்கப்பெற்றுள்ளது. அன்னையின் 84ஆவது பிறந்தநாள் அறநிதிய விழா 07-01-2009 அன்று இடம்பெறவுள்ளது. அத்திருநாளில் சிவத்தமிழ்செல்வி நினைவாலயம் திறக்கப்படவுள்ளது சிறப்புக்குரியது. அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தில் சுப்பிரமணியமுனிய சுவாமிகளின் சீடர்களில் ஒருவராக விளங்கும் ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் நினைவாலயத்தை திறந்து வைக்கவுள்ளார். கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் யோகசுவாமிகளின் அடியவராகிய அமெரிக்காவைச் சேர்ந்த சுப்பிரமணியமுனி சுவாமிகளின் திருவருட்பார்வையில் அகப்பட்டு அவரைப் பின் தொடர்ந்து பத்தொன்பது ஆண்டுகள் ஹவாய் ஆதீனத்தில் ஆன்மீகப்பணி ஆற்றிவருகிறார். அன்னைமீது மிகுந்த அபிமானம் கொண்ட தொண்டுநாதசுவாமிகள் 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆன்மீகப் பெரியார் என்ற சர்வதேச விருதினை அம்மாவுக்கு வழங்குவதற்குக் காரணமாக விளங்கியவர். அன்னையின் அஸ்தியை காசிக்கு கொண்டு சென்று கங்கையில் கரைத்து வழிபாடு செய்துவிட்டு நினைவாலயத் திறப்பு விழாவிற்கு இவ்விடம் வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பதற்கு அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார். இந்து மக்களுக்கு குரல் கொடுக்கவல்ல பெருமை மிகு ஸ்தாபனத்தை வளர்த்தெடுத்த திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் தொண்டுபற்றி அறியாதவர்களில்லை. கொழும்பில் ஆதரவற்ற சைவச் சிறுவர் இல்லத்தைத் தோற்றுவித்தவர்களில் இவர் முதன்மையானவர். பல்வேறு நெருக்கடியான காலகட்டத்தில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு இந்துமாமன்றம் பேருதவி புரிவதற்கு இவர் முழுமுதல் காரணமாக விளங்கியவர். அன்னையின் நினைவாலயம் அருகே துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் மகிழ்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பூங்காவை அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவராகவும், திருக்கேதீஸ்வர சிவாலய திருப்பணிகளில் பெரும்பங்கு கொண்டு உழைப்பவரும் மனிதநேய அமைப்பின் தலைவருமாகிய திரு. வி. கைலாசபிள்ளை அவர்கள் வருகை தரவுள்ளதும் சிறப்புக்குரியது. சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்தநாள் அறநிதியச் சபை வழமைபோல் அன்னையின் பெயரால் யாழ். கல்வி வலயப் பகுதியிலுள்ள உச்ச வறுமையும், திறமையுமுள்ள மாணவரைத் தேர்ந்தெடுத்து ரூபா இரண்டு இலட்சம் நிதியினை வழங்க ஏற்பாடு செய்துள்ளது. மேலும் அன்னையின் இறுதிக்கால வேளை அவரைப் பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவுக்கென ரூபா ஒரு இலட்சமும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிவத்தமிழ்ச்செல்வி நினைவாக ஈழத்து பெண்களின் ஆன்மீக, கல்வி, அறப்பணி தொடர்பான ஆராய்ச்சி மலர் வெளியிடுவதற்கான பணி தற்போது நடைபெற்று வருகின்றது. பல அறிஞர்களைக் கொண்ட மலர்க்குழு உருவாக்கப்பட்டு ஆய்வு மலர்ப்பணி நடைபெற்று வருகிறது. இவ் ஆய்வுமலர் அம்மையாரின் குருபூசைநாளில் வெளிவரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஆறு. திருமுருகன்**
**தலைவர்,**

**சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை**
**தெல்லிப்பழை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவன் அருட் கதைகள்

மாதாஜி அவர்கள்

### 38. உலவாக்கோட்டை அருளிய கதை

மதுரைத் திருநகரத்தில் வேளாளர் குளத்தில் அடியார்க்கு நல்லான் எனப் பெயர்பெற்ற ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் தருமசீலை. அவள் கற்பினிற் சிறந்தவள்.

அடியார்க்கு நல்லான் வேளாண்மை செய்து அதனால் வரும் ஊதியம் கொண்டு அரச இறையும் கொடுத்துச் சிவனடியார்க்கு மகேஸ்வர பூசையும் செய்துவந்தான். மகேஸ்வர பூசை செய்வதால் அவனுக்கு வருவாய் பெருகிற்று. சிவபெருமான் அடியார்க்கு நல்லானின் உண்மையை உலகிற்கு உணர்த்த விரும்பினார். இதனால் அவன் முன்போல் மகேஸ்வர பூசை செய்ய முடியாது பொருள் வருவாய் குன்றியது. அதனால் அவன் யாரிடமும் கடன் வாங்க முடியாது செய்தார் சிவபெருமான்.

சிவனடியார்க்குத் திருவமுது செய்வித்தாலன்றி போசனம் செய்யாமையை நியமமாகக் கொண்ட அடியார்க்கு நல்ல போசனம் செய்யாது தன்னுயிர்த்துணையாகிய பத்தினியோடும் பட்டினியிருந்து கவலையினால் உள்ளமும், பசியினால் உடம்பும் புழுங்கப்பட்டான். பின்பு நிலையில்லாத உடம்பினாற் பெறும் பயன் யாது? இனி என் மனைவியோடும் போய் சோமசுந்தரக் கடவுளுக்கு விண்ணப்பம் செய்து உயிர் துறக்க முடிவு செய்து இருவரும் ஆலயம் சென்றனர்.

அடியார்க்கு நல்லானும் துணைவியும் ஆலயம் சென்றனர். சிவபிரானை வணங்கினர். "எம்பெருமானே! அடியேனுக்கு வயல் விளைச்சல் இல்லையால் சிவனடியார்க்கு மகேஸ்வர பூசை குன்றி விட்டது. கடன் தர வல்லாரும் இல்லை. கடன் தர வல்லாரைக் காட்டியருளும். அப்படிக் காட்டாதொழியின் உயிர்விடுவேன் என்று மனைவியோடு விண்ணப்பம் செய்தான். அப்பொழுது ஆகாயத்திலிருந்து ஓர் அசரீரி வாக்காக அப்பனே! அஞ்சாதே நாம் இன்றைக்கு உன் வீட்டிலே வெண்மையான அரிசிக் கோட்டையொன்று வைப்போம். அது எப்பொழுதும் எடுக்க எடுக்க குறையாது. நீ அதை நாள்தோறும் பூசை செய்து யாவர்க்கும் அன்னதானம் முதலிய நானாவித தருமங்களும் செய்து வாழ்ந்திருக்கக் கடவாய் முத்தியையும் பின்பு தருவோம்" என்றருளியது.

அடியார்க்கு நல்லான் அது கேட்டு மகிழ்ந்து மனையாளோடு வீட்டுக்குச் சென்றான். அவ்வுலவாக் கோட்டையைத் தனது முன்னைய தவப்பேறாகக் கொண்டான். அவன் அதற்குப் பூ முதலியவற்றால் பூசனை செய்து தூபம் காட்டி பயபக்தியோடு அவற்றிலுள்ளவற்றை எடுத்துச் சிவனடியார் முதலாக யாவர்க்கும் கொடுத்துத் தன் துணைவியோடும் சுற்றத்தாரோடும் சிவசாருப்பியம் பெற்று சிவலோகத்தில் வாழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**39. மாமனாக வந்து வழக்குரைத்த கதை**

மதுரை நகரில் வைசியர் குலத்தில் தனபதி என்ற ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கும் அவன் மனைவி சுசிலைக்கும் நீண்ட நாட்களாகப் பிள்ளைப்பேறு கிடைக்கவில்லை. இதனால் தனபதி தனது தங்கையின் மகன், மருமகனைத் தன் புத்திரன்போல பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தான். எனினும் தனபதியும், மனைவியும் தனது இளையாளை ஒதுக்கி இழிவு படுத்தி வந்தான்.

இதனைப் பொறுக்காத இளையாள் தனது தமையனாகிய தனபதியைக் கோபித்து "உனக்குப் பெருமிதம் ஏன்? நீ பிள்ளைப்பேறற்ற பாவி. நீ என் அருமைப் பிள்ளையினாலன்றோ இருமைப்பயனையும் அடைவாய;" என்றாள். தனபதி மிகவும் வெட்கமடைந்து இனிமேலாவது தவமிருந்து பிள்ளைபெறுவேன் என்று கூறித் தனது உடமையெல்லாம் மருமகனுக்கு எழுதிவிட்டு தமது மனையாளோடு தவம் செய்ய வனம் வென்றான்.

நீண்ட நாளாகியும் தனபதியும் மனைவியும் வராமை கண்ட தாயத்தார். தமது வலிமையினால் பொய் வழக்குப் பேசி தனபதியின் மருமகனிடமிருந்து பொருட்கள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு நாயையும் மகனையும் விரட்டி விட்டனர். தனபதியின் தங்கை யாது செய்வாள். உற்றவிடது உதவிகின்ற சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்திற்குச் சென்றாள்.

சோமசுந்தரக் கடவுளை அடைந்து "எல்லாருக்கும் தந்கையும் தாயுமாகிய சுவாமீ! நீரே அடியேங்களுக்குத் தந்தையும் தாயுமாவார். அடியேனுடைய தமையன் தனக்குப் புதல்வன் இல்லாமையால் அடியேனுடைய இந்தப் புதல்வனையே தனக்குப் புதல்வனாகக் கொண்டு தன் செல்வமெல்லாவற்றையும் இவனுக்கே கொடுத்துவிட்டு அன்றே போயினான். ஆனால் அவனுடைய உறவினர்கள் தங்கள் வலிமையினால் செல்வம் எல்லாவற்றையும் பறித்து விட்டனர். நான் ஒருத்தி மட்டும் தனித்தவள். இவன் அறிவிலாச் சிறுவன் அடியேங்களுக்கு வேறு துணையில்லை. அருட் பெருங்கடலிலே எங்கும் நிறைந்த நீ இவையெல்லாம் அறிவீரோ? என்று விண்ணப்பம் செய்தாள். பின்னர் பூமியில் வீழ்ந்து வணங்கினாள். சிறிது நேரத்தில் உறங்கிவிட்டாள்.

அப்பொழுது சிவபெருமான் அவளுடைய சொப்பனத்தில் (கனவில்) பிராமணராய்த் தோன்றில் "பெண்ணே கேளாய்! விடிந்தபின் தாயத்தார்களை அரசனாணையிலே தரும சபையில் வருவித்து மறித்துக்கொண்டிரு. நாம் வந்து வழக்குப்பேசித் தீர்தருளுவோம் போ என அருளினார். உடனே தனபதி தங்கை விழித்தெழுந்து வியந்து யாருமற்றவர்க்குத் தெய்வமே துணை என்பதை அறிந்தேன். என்று சிவபெருமானை வணங்கிவிட்டு மகனுடன் தன் வீட்டுக்குச் சென்றாள். மறுநாள் எழுந்து கோயில் சென்று வணங்கித் தாயத்தாரின் வீட்டுக்குப்போய் பலவாறு நீதி மொழிகள்கூறி நிந்தித்து தரும சபைக்கு வரும்படி அழைத்தாள். அப்போது தாயத்தார் அவளை வைது தள்ளி அகற்றினார்கள். அவள் மகனுடனே தர்ம சபைக்குச் சென்று முறையோ? முறையோ வென்று கதறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாயத்தாரின் அடாத செயல்களை முறையிட்டாள். அது கேட்ட தர்மசபை ஏவலாளர் மூலம் தர்ம சபைக்கு அழைத்தார்கள்.

அப்போது தனபதி போலச் சிவபிரான் வேடம் தாங்கித் தர்ம சபைக்கு வந்து, "இங்கு அரசன் இல்லையோ? செங்கோல் கொடுங்கோல் ஆயிற்றோ! பெரியோர்கள் இல்லையோ! தெய்வமும் இல்லையோ? தர்மம் பொய்த்ததோ" என்று இவ்வாறு சொல்லிக்கொண்டு தர்ம சபைக்குள் புகுந்தார். இது கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். அப்போது தாம் வெல்வோமென்று நினைத்த தாயத்தார்கள் மனம் தளர்ந்து அச்சமும், நாணமும் அடைந்தார்கள். தனபதியாக வந்த சிவபெருமான் தங்கையையும், மருமகனையும் தம் கையாற் தழுவிக் கொண்டு "வறியவர்களாய் விட்டீர்களே!" என்று அழுதார். தங்கையும் மருமகனும் தனபதியின் பாதங்களில் விழுந்து அழுதார்கள்.

தனபதி அவர்களைத் தூக்கி தன்னுடன் அணைத்துக் கொண்டு கண்ணீர் நதியால் அவர்களை நீராட்டினார். பின்னர் மருமகனைப் பார்த்து ஒவ்வொரு அங்கங்களாய்த் தழுவி அவ்வவ் அங்கங்களுக்குரிய ஆபரணங்களைக் காணவில்லையே என்று ஏங்கினார். அவைகள் தாயத்தார் கவர்ந்ததை அறிந்து மீண்டும் வழக்குத் தொடரப்பட்டு தனபதியின் செல்வம் யாவும் தனபதியின் மருமகனுக்கே உரியது என்றும் தனபதி மறைந்துவிட்டார். இதனையறிந்த பாண்டியன் சோமசுந்தரக் கடவுளை வழிபட்டான்.

## தங்கம்மா நீயொரு தவப்புதல்வி

*தங்கம்மா நீ தமிழ்த் தாயின் தவப்புதல்வி*
*எங்கெல்லாம் தமிழின் ஓசை ஒலிக்கின்றதோ*
*அங்கெல்லாம் தங்கள் மாதுஸ்ரீ பெயரொலிக்கும்*
*பங்கமில்லா உன்சேவை வையத்தாலே வாழ்வாய் நீ*

*சைவத்தின் தனிச்சிறப்பு மெல்லாம் விளங்கவைத்த*
*கைவந்த கலையைச் சைவச் சபையெல்லாம்*
*சிவனவனின் திருவருளாலே வந்ததந்தச்*
*சிவத்தொண்டு என்று நிதம்பகர்ந்தீர் தாரணிக்கு.*

*திலகவதி மங்கையர்க் கரசி மாதென்று*
*பலபெண்கள் வரிசை யிலேநீ புகுந்தாய்*
*உலகெல்லாம் தமிழும் சைவமும் ஒலிக்கவைத்தாய்*
*பலபணிகள் நீசெய் தாய்மா ஜோதியும்*

*குருவடிகள் ஞானம் பெற்றாய் ஒளவைதாயே*
*கருணையுள்ள துர்க்கை பீடம் நீ பெற்றெடுத்தாய்*
*பெருமையுறு பெருந்தொண்டாம் பூசை செய்தாய் நீ*
*பெருமைக்குரிய தங்கம் மாதா நீதான்*

*அருட்பணியும் ஆன்மீகப் பணியுடன்கூட*
*அறிவுப்பணி என்று பலப்பல பணிகளெல்லாம்*
*திறம்படவே செய்து சிறப்புப் பெற்றாய்நீ*
*இறவாத புகழ்தனைப் பெறவே கிடைத்திட்டாய்*

*கலங்கரைவிளக் காய்நீ வழியைக் காட்டுநல்ல*
*நலம்பெறவைத் தாய்பல பெண்கள் வாழ்வைத்தான்*
*நலமுடனே முதியோர் நல்வாழ் வமைத்தாய்*
*திலகமாகத் திகழ்கின்ற தாய்நீயாம் கன்னிச்செல்வி*

கவிஞர் - வ. யோகானந்தசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து:

# உண்மைக்குக் கிடைத்த வெற்றி

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

ஒரு காலத்திலே பாண்டிய அரசன் ஒருவனுக்குத் துண்டகன் என்ற ஒரு மந்திரி இருந்தான். துண்டகன் பேராசையும், கொடிய பாவங்களுக்கு அஞ்சாத மனங் கொண்ட அதமனுமாய் இருந்தான். ஆனால் நல்லவன்போல் நடப்பதில் வல்லவன்.

ஒருமுறை சில அலுவல் காரணமாக பாண்டிமண்டலத்தின் ஒரு பகுதியாய் இருந்த திருப்பெருந்துறைக்குப் போனான் துண்டகன். அந்தக் கிராமத்தின் ஒரு பகுதியாக இருந்த 'சிவபுரம்' அவனுக்கு மிகவும் பிடித்துப்போயிற்று. அதன் அழகும், அமைதியும் அவனுக்கு ஆசையூட்டின. சிவபுரத்திலே பிராமணர் வாழ்ந்தனர். தனது முரட்டுக் கூலிப் பட்டாளத்துடன் அங்கே போன துண்டகன் அந்தப் பிராமணர்களை வெருட்டி மிரட்டிக் கலைத்து விட்டான். காணி எல்லைகளை எல்லாம் பிடுங்கி எறிந்தான். பிராமணர்களுடைய காணி உறுதிகளை எல்லாம் கவர்ந்து கிழித்து அழித்துவிட்டான். அந்தச் சிவபுரம் தனது மூதாதையாரின் பரம்பரைச் சொத்து என்று உறுதி எழுதி அரச முத்திரை இட்டு வைத்துக் கொண்டான்.

வீட்டையும் கிராமத்தையும் விட்டே விரட்டப்பட்ட பிராமணர்கள். செய்வது அறியாமல் அகதிகளாக ஓடினார்கள். வன்முறைக்கு முகம் கொடுக்க முடியாத அப்பாவி அந்தணர்கள் திருப்பெருந் துறையில் கோயில் கொண்ட ஆத்மநாத சுவாமியே கதியென்று அழுது முறை யிட்டார்கள். சில நாட்கள் சென்றன.

ஒருநாள் ஒரு வயதான பிராமணர் அவர்களிடம் வந்தார். என்பேர் பரமசுவாமி. சிதம்பரத்திலே இருக்கிறேன். உங்கள் பாட்டன், பூட்டன் பலரை எனக்கு நல்ல பழக்கம். உங்கள் சிவபுரம் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். உங்களுக்கு இப்போ வந்திருக்கிற கஷ்டத்தைக் கேள்விப் பட்டுத்தான். உங்கள் எல்லோரையும் பார்க்க வந்தேன் என்றார். சிவபுரத்து பிராமணர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு அழுது புலம்பினார்கள். துண்டகன் செய்த வஞ்சனையைச் சொல்லி வருந்தினார்கள்.

"நான் எல்லாமே கேள்விப்பட்டேன். உங்களைச் சிவபுரத்திலே கொண்டுபோய் மறுபடி உங்கள் வீடுகளிலே விடுவது என் பொறுப்பு" என்றார் கிழவர். "ஐயா! அந்தத் துண்டகன் மகாபாவி. எங்களை வீட்டைவிட்டு விரட்டியது மட்டுமில்லை. எங்கள் காணி உறுதிகளை எல்லாம் பிடுங்கிக் கிழித்து எரித்துவிட்டான். சிவபுரத்திலே தன் அடியாட்கள் பலரை குடிவைத்திருக்கின்றான். அவர்கள் பாவத்துக்கு அஞ்சாத பாவிகள்!" என்று பிராமணர்கள் அழுதார்கள்.

"அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். கவலையே படாதீர்கள்!" என்றார் கிழவர். "சுவாமி! அந்தத் துண்டகன் என்னவும் செய்வான். எங்களால் உங்களுக்கும் ஆபத்து வேண்டாம். நீங்கள் எங்களை வந்து பார்த்ததே போதும். சுகமாகத் திரும்பி ஊர் போய்ச் சேருங்கள். இனி எங்களுக்கு கடவுள் விட்ட வழி" என்று சொன்னார்கள் பிராமணர்கள். "நீங்கள் எனக்காகப் பயப்பட வேண்டாம் துண்டகன்போல் எத்தனைபேரை நான் பார்த்திருக்கின்றேன். உங்கள் காணி, வீடு, எல்லை எல்லாமே எனக்கு மனப்பாடம். நீங்கள் நான் சொல்லுகிறபடி நடக்க வேண்டும். எல்லாம் வெற்றியாகும். அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பொறுப்பு" என்று அவர்களைச் சமாதானப்படுத்தினார் கிழவர். அவர்களுக்குப் பல புத்திமதிகள் சொன்னார். அவர்களும் மந்திரத்திற்குக் கட்டுப்படுவது போலக் கிழவருடைய பேச்சுக்குக் கட்டுப்பட்டார்கள்.

பிராமணருக்குத் தைரியமூட்டிய கிழவர் அவர்கள் எல்லோரையும் கூட்டிக் கொண்டு மதுரைக்குப் போனார். மதுரையில் அரச வீதியில் மறியல் செய்தனர் பிராமணர். கிழவர் தலைமை தாங்கினார். கிழவர் அரசனிடம் நீதி கேட்டு அதி உச்சக்குரலிலே கோஷமெழுப்பினார். பிராமணர்களையும் சத்தம் போடத் தூண்டினார். அவர் கொடுத்த தைரியத்தில் எல்லாப் பிராமணர்களும் அவர் சொல்லித் தந்ததை அப்படியே திருப்பிச் சொல்லிப் பெரும் சத்தம் போட்டார்கள்.

"பாண்டியனே நீதி எங்கே?"

"எங்கள் வீடும் நிலமும் ஏன் பறித்தாய்"?

"பாண்டியன் ஆட்சியில் நாங்கள் பலியாடுகள்"

என்றெல்லாம் ஒரே சத்தம். மதுரை மக்கள் வேடிக்கை பார்த்தார்கள். வீதியல் ஒரே களேபரம்.

கிழவர் தலைமையில் ஒரு கூட்டம் அரச மாளிகைக்கு வந்துவிட்டது. அரண்மனை வாசலில் ஒரே ஆரவாரம். ஒரே சன வெள்ளம். அரசன் நேரே வாசலுக்கு வந்தான். திகைத்துப்போனான். விசாரித்தான். கூட்டத் தலைவரை அழைத்தான். கிழவர் ஆவேசத்தோடு முன் வந்தார். அரசன் விபரம் கேட்டான். கிழவர் துண்டகனின் கொடுமையை விசாரித்தார். சிவபுரம் கிராமத்தின் பாங்கு, அங்கு வாழ்ந்த பிராமணர்களுடைய இயல்பு எல்லாவற்றையும் விபரமாக எடுத்துக் கூறி நீதி கேட்டார். அரசன் அதிர்ந்து போனான். உடனே அமைச்சனான துண்டகனை அழைத்தான். கிழவர் முன்னிலையிலேயே அவனை விசாரித்தான். சிவபுரம் தன் முதாதையாரின் பரம்பரைச் சொத்து என்பதை அரசமுத்திரை பொறித்த பட்டயத்தைக் காட்டி நிறுவினான் துண்டகன். பிராமணர்கள்தான் தன் காணியில் அத்துமீறிக் குடியேற முயல்கிறார்கள் என்றும் குற்றஞ் சுமத்தினான். கிழவர் வெகுண்டார்.

பிராமணர்களுடைய பூர்வீக நில உறுதிகளை தன் கையிலிருந்த மூட்டைப்பிரித்து காட்டினார். அவர்களுடைய வழிவழிப் பரம்பரைப் பட்டப் பேர் விபரம் எல்லாம் தெளிவாக எடுத்துச் சொன்னார். அரசன் திகைத்தான்.

உண்மையறிய பிராமணர்கள், துண்டகன், கிழவர் எல்லோருடனும் சிவபுரம் கிராமத்திற்கு வந்தான். அங்கும் அவர் வீடு, காணி விபரங்களைத் தெளிவாகக் குறித்துக் காட்டினார். அரசனுக்குத் தரும சங்கடமாகயிருந்தது. ஒரு மேடான வறண்ட இடத்தைக் காட்டி "இங்கு இடத்தில் தண்ணீர் உண்டா?" என்று துண்டகனைக் கேட்டான்.

"இல்லை அரசே இந்தப் பக்கம் தண்ணீர் இல்லை அதனால்தான் இப்படி வறண்டு கிடக்கின்றது" என்று துணிவுடன் இயல்பாகச் சொன்னான் துண்டகன். "அரசே! இந்த இடத்தில் ஒரு முழத்திலே தண்ணீர் வரும்" என்றார் கிழவர். "அப்படியானால் நிரூபியுங்கள்" என்றான் அரசன். ஒரு மண்வெட்டி கொண்டுவரச் சொன்னான். கிழவர் அதை வாங்கி நிலத்தில் இரண்டு கொத்து கொத்தினார். தண்ணீர் பீறிட்டு எழும்பிப் பூம்புனல்போல அங்கே நின்றவர்களை நனைத்தது. அரசன் வியந்தான். உண்மை உணர்ந்தான். துண்டகனுக்குத் தீராச் சிறைத் தண்டனை கிடைத்தது. பிராமணர்களுக்குச் சிவபுரம் திரும்பக் கிடைத்தது. கிழவர் சிரித்துக் கொண்டு திருப்பெருந்துறைக் கோயிலுள் சென்று மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டுகால் மாடு - ஆள்வாரிலி மாடு

ஆழ்கடலான் முருகவே பரமநாதன் அவர்கள்

நால் வகை யோனி, எழுவகைப் பிறவி என உயிரினங்களை நம் நாட்டு மூதறிஞர் வகுத்து வைத்தனர். இவ்வரிசையில் விலங்கும், மனிதமும் அமைந்துள்ளன. விலங்கு, மிருகம், விருகம் என்பன நாற்கால் விலங்கைச் சுட்டும். விலங்கிற் பல இனம் உண்டு அவை ஐந்து அறிவுடையன. அடுத்த படியில் வருவது மனிதம். இப்பிறப்பு பகுத்தறிவுடைய ஆறு அறிவுடையது. எனவே ஆறறிவுடையவன் மனிதன். பகுத்தறிவுடையது மனிதம். ஔவையார், அப்பர், தாயுமானவர், பாரதி என்று பலர் மனிதப் பிறவியின் செவ்வியை, விழுமியத்தை எடுத்துப் பேசியுள்ளனர். மிருகங்களில் மேலானது மாடு. மாட்டிலும் பசு மாடு மிக உயர்ந்தது. வீட்டுப் பிராணியது. பசு சாதுவானது. கமக்காரனின் பிரிய பிராணி. **"பாலைப் பொழிந்து தரும் பாப்பா' பசு மிக நல்லதடி பாப்பா"** எனப் பாரதி பாடி வைத்தார்.

விஞ்ஞானிகள் மனிதனை மனிதப் பிறவியைச் சமூகப்பிராணி, சமுதாய விலங்கு, இரண்டு கால் மிருகம் எனப் பேசிற்று. கிரேக்க சிந்தனையாளரொருவர் அரசியல் பிராணியென வர்ணித்தார். மனிதப் பிறவி தன் உயர் நிலையனின்று சற்று விலகி, இழிந்தால் அந்த வகையையும் விலங்கு என்றனர். ஆறறிவு மனிதம் ஐயறிவுடைய மிருக நிலையில் வாழ்ந்தால் அதுவும் மிருகம்தான். இந்நிலையயை உரைத்துப் பார்த்த தொல்காப்பியனார் **"மாவும் மாக்களும் ஐயறிவினவே"** எனச் சூத்திரம் செய்தார். மா ஐயறிவுடைய மனிதர். வள்ளுவனார் கல்வி கற்றாரையும் கல்லாதவரையும் ஒப்பிட்டு ஒரு குறள் தந்தார்.

***"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்***
***கல்லா ரோடு ஏனை யவர்"***

**குறள் ஓவியம் 410.**

சிறந்த நூல்களைக் கற்றறிந்தவரோடு ஒப்புநோக்க, கல்லாதவர், பகுத்தறிவுடைய மக்களோடு விலங்குகளுக்கு உள்ள வேறுபாட்டினை உடையவர். படியாதவனை மிருகத்தோடு ஒப்பீடு செய்தார் குறளாசான். ஔவையார் **"சபை நடுவே நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் மரம்"** எனப் பாடியுள்ளார் இன்றைய, விஞ்ஞானமயமான, இயந்திர மயமான இப்பூமியில் வாழும் மனித இனம் நடுவுநிலையின்றி, மனிதநேயம், விழுமியங்கள், விழுப்பங்கள் சிதைந்து அமைதி, சமாதான சக வாழ்வை இழந்து திகைப்புடன் வாழும் நிலை மனித சமுதாயத்தின் இன்றைய நிலவரமாக தெரிகிறது. விஞ்ஞானக் கோட்பாட்டுடன் மெஞ்ஞானமும் முன்னெடுக்கப்படும் இவ்வேளையை பல நூற்றாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தாயுமானவ சுவாமிகள் தன்னைப்பற்றிய பரிமாணத்தை ஆழ்ந்த சிந்தனையோடு வெளியிட்டுள்ளார்.

***"திகையாதோ எந்நாளும் பேரானந்தத்***
***தெள்ளமுதம் உதவாமல் திவலை காட்டி***
***வகைஆக அலக்கழிந்தாய்; உண்டு, உடுத்து***
***வாழ்ந்தே நான் இரண்டுகால் மாடுபோலே"***

**4 - பெற்றவட்கே 8- தாயுமானவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைப்பாதோ - என்மனமானது மயங்குமோ?, எந்நாளும் - எக்காலமும், பேரானந்த - பேரின்பமாகிய, தேன் அமுதம் - தெளிந்த அமுதத்தை, உதவாமல் - கொடாமல், திவளை - சிறிது, காட்டி - காட்டி, வகையாக - வகை வகையாக, அலைக்கழித்தாய் - அலையவைத்தாய், இரண்டு கால் - இரண்டு கால்களையுடைய, மாடுபோல் - மாட்டைப்போல, உண்டு உடுத்து - உண்டும் உடுத்தும், வாழ்ந்தேன் காண் - நான் வாழ்ந்தேன் என்க.

உரை பூனை கவியாணசுந்தரமுதலியார் - (மேல் குறித்த) திருவாசகம் விரிக்கும் அறிவிருந்தும், கிரகிக்காமையால் - மாடுபோல் வாழ்ந்தேன் எனக் கூறினார். உண்டுடுத்து வாழ்வது மனிதனுக்கு இயல்பாய் அமைந்தவை எனினும் மனிதன் அவையும் கடந்து ஓர் மேன்மையான வாழ்வை வாழ்தல் வேண்டுமன்றோ. இந்த உண்டுடுத்தல் பற்றி பல அறிஞர்களும் எடுத்தாண்டுள்ளனர். பல கட்டங்களிலே உண்டு, உடுத்து இவை மட்டுமே செய்யும் மனிதன் மனிதத் தத்துவத்தை நழுவவிட்டு மிருகத்துக்குச் சமமாய் விடுகின்றான். மானுட நோக்கம் ஆத்ம விடுதலை காண்பதே. அதற்கு இதமான பிறப்பு மனிதமே. இந்த நிலைபற்றி மாணிக்கவாசகர் தன்னை "ஆள்வாரிலி மாடு" என்றார்.

*"இரங்கும் நமக்கம் பலக்கூத்தன் என்றென்று ஏமாந்திருப்பேனை*
*அருங்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வா ரிலிமா டாவேனோ*
*நெருங்கும் அடியா ரும்நீயும் நின்று நிலாவி விளையாடும்*
*மருங்கே சார்ந்து வரஎங்கள் வாழ்வே வாவென் றருளாயே"*

கோயில் மூத்த திருப்பதிகம் - 7.

பொருள் : எங்கள் வாழ்முதலே, நமது சிற்சபையில் திருநடம் செய்யும் இறைவன் இரங்கி வந்து அருள்வானென்று நினைந்து நினைந்து அயர்வுற்று இருக்கின்ற என்னை இல்லாத புதிய ஏற்பாடு செய்து ஆட்கொண்டாய். இப்போது நான் உடையவன் இல்லாத மாட்டுக்கு ஒப்பாவேனோ? நீயும், நின்னை நெருங்கி வாழும் அடியார்களும் நிலைத்து, விளங்கி மகிழ்கின்ற பக்கத்தின் சார்பாக நானும் வரும்படி இங்கே வா என்று கட்டளை இட்டருள்வாயாக. ஆள்வாரிலி பாதுகாப்பாரில்லாத, உடையவர் இல்லாத, மேய்ப்பாரில்லாத, கட்டுக்கு வராத, கட்டைக்கு வராத என்று பொருள்படும் தன்னிச்சையாய் வாழும் மாடு கட்டுக்கொடிக்கு அகப்படாத காட்டு மாடு. இரண்டுகால் மாடு என்றார் தாயுமானசுவாமிகள். ஆள்வாரிலி மாடு என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். மதேச்சையாய்த்திரியும் மாடு அது. அந்த நிலையிலிருந்து மாற்றி அதை அரவணைத்துக் கட்டி அவிழ்ப்பவன் மாட்டின் சொந்தக்காரன், உரிமையாளன். அப்போதுதான் மற்றைய மாடுகள்போல் படிக்குவரும் அம்மாடு. எனவே நாம் கட்டாக்காலி மாடாக நாம் வாழ்தல் சாலாது அன்றோ. பிறவியின் இலக்கு பிறவியறுப்பதே. பிறவியறுக்க வந்த பிறவி மானிடம். இதைப்ப நாவலர். "நாம் இந்தச் சரீரம் எடுத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என இடித்துரைத்தார். புல்லில் இருந்து தேவர் வரை பிறவியின் இரகசியம் பற்றி மணிமொழியார் இப்படி வர்ணிக்கின்றார்.

*"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*
*வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்*
*எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"*

சிவபுராணம் 26-31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்து நான்கு இலட்சம் பிரிவுகளுள் மானிடத்துதித்தல் வெகு அரிதாம். **'அரிது அரிது மானிடராதல் அரிது'** என்றார் அவ்வை. எறும்பில் இருந்து யானைவரை எத்தனை ஜெனனம். மனிதனாய்ப் பிறந்து மாடாய் வாழக் கூடாது. மனிதத்தை உயர்த்தி தெய்வீகம் கண்டு ஆத்ம விடுதலை பெறவேண்டும். நேற்றைக் கவலை ஏன் இனி. நெற்றிக் கண்ணன் அருளுவான் என்கிறார் கவியோகி சுத்தானந்தர். வயிற்றுக்குச் சோறிட உழைப்பதுபோல,ஆன்ம ஈடேற்றத்துக்காகவும்நாம் ஒவ்வொருவரும் உழைக்கவேண்டுமன்றோ. இந்த மனிதம் சிறக்கவில்லையே என ஒரு சித்தர் கவல்கின்றார்.

*"புல்லாய்ப் பிறந்தாலும் மிருகாதி ஜெனனங்கள்*
*பசியாறி மகிழுமன்றோ*
*பூண்டாய்ப் பிறந்தாலும் புலத்தியர்கள் கொண்டு சில*
*பிணிதீர்த்துப் புகழ்வரன்றோ*
*கல்லாய்ப் பிறந்தாலும் நல்லவர்கள் மதி கொண்டு*
*காட்சிக்கு உறுத்துமன்றோ*
*கழுதையுரு வந்தாலும் ஆவெனக் கத்தினால்*
*கைகண்ட சகுனம் என்பார்*
*எல்லா மில்லாமலே இப்பிறவி தந்தென்னை*
*ஏங்கவிட்டகை நின்றாய்*
*எத்தனை அன்னையினம் எத்தனை தந்தையினம்*
*எத்தனை பிறவி வருமோ*
*அல்லெனும் ஆசறுத தாட் கொளுந் தெய்வமே!*
*அப்பனே தில்லைநகர் வாழ*
*அதிபதீ ஜனகாதி துதிபதி சிவகாமி*
*அன்பிலுறை நடன பதியே"*

**சிதம்பர நடராஜர் துதி.**

ஒரு பசுவை மேய்த்துப் பொருத்தமான தீனியிட்டு, குளிக்கவார்த்து அதன் பட்டியை நன்கு சுத்தீகரித்து நல்ல கறவை மாடாக்குவதுபோல. உடலோடு சேர்ந்து உயிரைப் பேணி, அறிவை வளர்த்து உண்டு உடுப்பதுபோல, உயிரதும் உடலதும் நலம் பேணின் கறவையில் பால் எடுப்பதுபோல நம் உடம்பின் உறுதுணை கொண்டு உடம்பை வளர்த்து உயிரையும் வளர்ப்போமெனத் திருமூலர் அறிவுரை வழங்குகின்றார்.

*"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு*
*மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன*
*மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்*
*பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே"*

**திருமந்திரம் – 2883**

இறைவன் படைத்த இவ்வுடம்பிலே. மெய், வாய், கண், மூக்கு, செவி, ஐம்புலன்கள். யானையை அடக்குவதுபோல ஐம்புலன்களையும் அடக்கிச் செவ்வழிப்படுத்தினார். நிறையப் பால் சொரியும் அம்மெஞ்ஞான நெறி எமக்கு ஆத்ம ஈடேற்றம் தரும். சிந்திப்போம், செயற்படுவோம்.

*"புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரமாம்"*

**ஔவையார்.**

*"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்*
*வகை தெரிவான்கட்டே உலகு"*

**குறள் – 27**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னமிட்ட கை

கிருஷ்ணா கிரிஜா அவர்கள்
மானிப்பாய்.

மனிதன் பலவிதம். அதில் ஒவ்வொருவரும் ஒரு விதம். அன்பு, பாசம் என்பவற்றால் கட்டுப்படுபவர்கள் சிறந்த மானுடராக வாழ்கிறார்கள். பொய், களவு, பொறாமை உள்ளவர்கள் நிம்மதியற்ற வாழ்வில் சஞ்சரிக்கிறார்கள்.

பொய் சொல்லாதே, பிச்சை எடுக்காதே, களவெடுக்காதே இம்மூன்று தத்துவங்களும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டியவை. சகலரும் தம் நோக்கங்களுக்காக இறைவனிடம் மன்றாடுகின்றார்கள். இறைவனும் அவர்களுக்கு உதவிபுரிகின்றார். இதனை தெய்வ நம்பிக்கை என்று கூறலாம். இதற்கு உதாரணமாக தெய்வீகக் கதையொன்று:

மதுரையில் திருடர் கூட்டம் அதிகம். இவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீடாகச் சென்று கொள்ளையடித்து வந்தார்கள். மக்களும் பயத்தினால் இரவு நேரத்தில் வீட்டைவிட்டு வெளியே வருவதில்லை. திருடர்கள் நள்ளிரவில் வீடு புகுந்து கொள்ளையடிப்பார்கள்.

அவ்வூரில் இறைபக்தி மிக்க பாட்டி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு உற்றார், உறவினர் யாரும் கிடையாது. தனிமையில் பலகாரம் செய்து விற்று பணம் சம்பாதித்து வந்தார். இந்நிலையில் கொள்ளை அடிக்கும் திருடர்களின் அடுத்தநிலை அந்தப் பாட்டியின் வீடு. அதைப் பாட்டியும் உணர்ந்தார். அந்தப் பாட்டி மாலையானதும் சோறு, கறி சமைத்து அப்பளம், வடகம் பொரித்து மோர்க்குழம்பு வைத்து வாழையிலையும் வெட்டி வைத்துக் கொண்டு திருடர் வரும் வரை காத்திருந்தார்.

நள்ளிரவு 12 மணிக்கு திருடர் கோஷ்டி அட்டகாசத்துடன் பாட்டி வீட்டினுள் புகுந்தது. பாட்டி மனம் நோகாமல் அவர்களை வரவேற்று, செம்பில் தண்ணீர் கொடுத்து தம்பிமாரே முதலில் கையைக் கழுவுங்கள் உங்களுக்கு அறுசுவை உணவு சமைத்திருக்கின்றேன். சாப்பிட்டுவிட்டு எப்பொருள்களை எடுத்துச் செல்லவும் என்று கூறினார். திருடர்கள் கை அலம்பிவிட்டு வாழையிலை முன் அமர்ந்தார்கள். சோறு வைத்து பல விதமான கறி வகைகள் இட்டு அப்பளம், வடகம், மோர்க்குழம்புடன் சுவைத்து உண்டார்கள். திருடர்கள் மிதமிஞ்சிய அளவில் சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டுக் கொண்டு எழுந்தார்கள்.

பாட்டி உடனே தன் வீட்டுக் கதவைத் திறந்து விட்டார். 'தம்பிமாரே! போய் உங்களுக்குத் தேவையானவற்றை எடுங்கள்' என்று அன்பாகக் கூறினார். திருடர்கள் பாட்டி உங்கள் வீட்டில் திருட மாட்டோம் என்றார்கள். பாட்டி, தம்பிமாரே என்னைப் போலத்தான் மற்றவர்களும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வைத்துள்ளார்கள். நீங்கள் ஒவ்வோர் இரவும் ஒவ்வொரு வீடாகக் கொள்ளை அடித்து வருகிறீர்கள். உங்களுக்கு பசி தீர்ந்ததனால் என் வீட்டை கொள்ளையடிக்கவில்லை அதேபோல் மற்றவர்களையும் மதிக்க வேண்டும் என்றார்.

திருடர்கள் 'பாட்டி பாட்டி பசியின் கொடுமையால் திருட்டு தொழிலைச் செய்தோம். பசி தீர்ந்ததால் களவு எண்ணமே மாறிவிட்டது. இனிமேல் நேர்மையான வழியில் உழைத்து சீவிப்போம்' என்று கூறி விடை பெற்றனர்.

இந்தப் பாட்டியின் உபதேசத்தால் அடுத்த நாளிலிருந்து அவ்வூரில் கொள்ளையே நடக்கவில்லை.

இதை அறிந்த மக்கள் 'ஊரைக் காத்த பாட்டி' என்று பாராட்டினார்கள்.

நன்றி : ஞானக்கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த மனிதன்

26வது குருமகா சந்நிதானம்
திருக்கயிலாய பரம்பரை தருமையாதீனம்

நல்லனவற்றையும் தீயனவற்றையும் அறிந்துணரும் ஆற்றல் பெற்றுள்ள மனிதன் தனக்கு வாழ்த்த வாயையும், நினைக்க நெஞ்சையும், தாழ்த்தச் சென்னியையுந் தந்துள்ள பிறப்பின் பயனாகப் பெறும்போதுதான் உயர்ந்த நிலையைப் பெறுகிறான். அப்பர் சுவாமிகள் இறைவனை வழிபடுவதற்கே இப்பிறவி வாய்த்துள்ளது என்ற உண்மையை,

*"குனித்த புருவமும் கொவ்வைச்செவ்*
*வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல்*
*மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற்*
*பாதமுங் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே*
*இந்த மாநிலத்தே"*

என்று அருளிச் செய்திருக்கின்றார்.

உலக வாழ்க்கையில் ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய முயற்சிகள் எதையும் மேற்கொள்ளாது, வாழ் நாளை வீண் நாளாக்குவோர் பலர். அவர்கள், மேலும் பல பல பிறவிகளை மாறி மாறி எடுத்து, இறந்தும் பிறந்தும் வாழும் பிறவிச் சுழலிற்பட்டு அல்லல் உறுவோரே ஆவர்.

**உய்தி உண்டா?**

உலகில் அறுபதாண்டுகளைப் பயனின்றிக் கழித்த ஒருவர் அப்பரடிகளைச் சந்தித்து, "அப்பர் பெருமானே! இப்பிறப்பில் அடியேனுக்கு உய்தி கிடைக்குமா? இறந்த பிறகு எனக்கு வீடுபேறு கிடைக்குமா? கூறியருளுங்கள்" என்று கேட்டார். அப்பரடிகள் அவரைப் பார்த்து, "ஐயா! முதியவரே! இறந்த பிறகு உங்கள் உயிர் சுவர்க்கத்தையடையுமா? அல்லது நரகத்தையடையுமா? அல்லது வீடுபேற்றைப் பெறுமா? என்பதைக் கணித்தறிய உங்களிடம் ஐந்து கேள்விகள் கேட்க விரும்புகின்றேன். அதற்கு நீங்கள் அளிக்கும் விடையை வைத்துக் கொண்டுதான் உங்கள் கேள்விக்கு விடை சொல்ல வேண்டும்" என்று கூறி முதற் கேள்வியை முதியவரிடம் கேட்டார்.

"இறைவன் திருநாமமாக விளங்குந் திருவைந்தெழுத்தை (பஞ்சாட்சரத்தை) உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எத்தனைமுறை செபஞ் செய்திருப்பீர்கள்?" என்பது முதற் கேள்வி.

அறுபதாண்டு உலகில் வாழ்ந்து கழித்த அம்முதியவர், அப்பரடிகளை பார்த்து, "ஐந்தெழுத்தா! அது இன்னது என்பதையே இந்நாள்வரை அறியேன், ஐயனே!" என்று விடையிறுத்தார்.

அப்பர் சுவாமிகள் சிந்தித்தார். "ஓர் ஆசாரியனை அடுத்து, பஞ்சாட்சார உபதேசம் பெற்று அதனை முறையாக ஒருவன் செபஞ்செய்வது ஒரு அரிய செயலாகவும் இருக்கலாம். எல்லோரும் மேற்கொள்ளத்தக்க எளிய செயலாகவே மற்றொன்று கேட்போம்" என்று திருவுள்ளத்து எண்ணி, அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"இறைவனது அளவற்ற ஆற்றலையோ, அவன் உயிர்கட்கு வழங்கும் கருணையின் திறத்தையோ வியந்தும், புகழ்ந்தும் மற்றவர்களிடம் உரையாடியது உண்டா?" என்பது இரண்டாங்கேள்வி.

"அடிகளே! இந்நாள்வரை பயனின்றிப் பேசிப் பொழுது கழித்தேனேயொழிய, இறைவன் புகழை வாழ்த்தியோ அவர் திறம் விரித்தோ யாரிடமும் எதுவும் பேசியதில்லை" என்று இரண்டாவது கேள்விக்கு விடையிறுத்தார் முதியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடோறுமோ அல்லது வாரம் ஒரு முறையோ அல்லது திருவிழாக் காலங்களிலோ திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்ததுண்டோ?" என்று மூன்றாவது கேள்வியைக் கேட்டார் அப்பர். "திருக்கோயில், எங்கள் ஊருக்கு நடுவில் இருக்கிறது. ஆலயமணி பூசை வேளைகளை ஊர் மக்களுக்கு இடைவிடாமல் தெரிவிக்கவுஞ் செய்யும். அப்படியிருந்தும் ஒருநாளாவது திருக்கோயிலுக்குப்போய் வலம் வந்து வழிபடவில்லைச் சுவாமி!" என்றார் முதியவர். பின்னர், "வீட்டிலாவது ஒரு தெய்வத் திருவுருவமோ, படமோ வைத்து வழிபாடு செய்து வருகின்றீர்களா? நீராடி உண்பதற்கு முன் மலர் பறித்துச் சாத்தி வழிபட்டு உண்பதுண்டா?" என்று கேட்டார் அப்பர் சுவாமிகள். நான்காவது கேள்விக்கும் "இல்லை" என்றே பதிலிறுத்தார் முதியவர்.

அப்பரடிகள், "இந்தக் கேள்விக் காகுதல் சிந்தித்து நல்ல விடை சொல்லுங்கள்" என்று கூறி, அடுத்த கேள்வியைக் கேட்டார்.

சைவர்களாய் இருப்பவர்கள் எல்லோரும் நாடோறும் திருவெண்ணீறு அணியத் தவறமாட்டார்களே. திருநீற்றின் பெருமையையோ அணிவதற்குரிய காரணத்தையோ அறியாதவர்கள்கூட, திருநீறு உடலிலுள்ள பலவகை நோய்களையும் போக்கவல்லது என்பதை அறிந்து, அதனைப் பூசுவார்கள். ஆதலின் இம்முதியவர் நிச்சயம் திருநீறு அணிபவராக இருக்கலாமென்று திருவுளத்தெண்ணி, ஐந்தாவது கேள்வியையும் எழுப்பினார்.

"நாடோறும் நீராடிய பின்னர் திருநீறு அணிவதுண்டா? என்பதுதான் ஐந்தாவது கேள்வி."

அதற்கு அம்முதியவர் 'இல்லை.' என்றே பதில் கூறினார். அப்பரடிகள் அம்முதியவர்மேல் இரக்கப்பட்டார்; இப்பெரியவர், தம் வாழ்க்கையில் இறைவனது கருணையை இழந்துவிட்டார் என்று உளங் கசிந்தார்; இவர், நோய்கள் பலவும் நலியப் பிறப்பு, இறப்பு என்னுஞ் சுழியிற் பட்டு இன்னும் பல காலம் பிறந்திறந்து வாழும் நிலையினைப் பெற்றுவிட்டாரே என்று இரங்கினார். பின்னர் அடிகள், முதியவரை விழித்து, அந்தியை வாழ்நாளினைது சமய நெறிப்படி வாழ்ந்தால் நற்கதி பெறலாம் என்று அறிவுறுத்தியதை அவர் அருளிய திருத்தாண்டகத்தால் அறியலாம்.

*திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்*
*தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்*
*ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்*
*உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்*
*அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்*
*அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்*
*பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்*
*பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.*

நிறைவுரை :

இவ்வைந்து கேள்விகளையும் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுக் கொள்ளவேண்டும். கடவுள் வழிபாட்டைத் தங்கள் கடமைகளுள் ஒன்றாக கருதி வாழ்பவரே பிறவா நெறியாம் பேரின்ப வாழ்வு பெறுவர். இறைவன் திருவடிகளை வழிபடுவதும், ஆசையை அகற்றி வாழ்வதுமே பிறவியறுதற்குரிய வழிகளாகும். ஆசையறுத்தற்குரிய எளிய வழி பற்றற்ற இறைவன் திருவடிகளின் மீது பற்றுக் கொள்வதேயாகும் என்பார் திருவள்ளுவர்.

*"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு"*

என்பது அவர் வாக்கு.

அன்பர்கள் அனைவரும் இறைவன் திருவருட்பேற்றை எய்துதற்குரிய வழிபாடுகளை நியமமாகச் செய்து, இம்மையின்பங்களையும் என்றும் வற்றா முற்றாப் பேரின்பப் பெருவாழ்வினையும் பெற்றுச் சிறக்க செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

நன்றி : காரை கார்த்திகேயப் புலவர் சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்தால் உயர்ந்த உத்தமிக்கு மனம் நெகிழ ஓர் மடல்

இறை பணிக்கே வாழ்வென்று
நம்பிக்கை கொண்டு
நிறைபணியில் எந்நாளும்
நின்ற பெரியார்
எண்ணியதை எண்ணியாங்கு
செய்து முடிக்கும்
ஏற்றமிகு செயலின் நாயகி
சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி என்னும்
நாமமுடையோர்

மக்கள் சேவையே மகேசன் சேவையென
சிக்கல் பல வந்த போதும்
சிறிதும் மனங் கோணாமல்
ஒப்புவித்த உள்ளத்துணர்வினார்
சீர்பெருகு சைவநீதி தளைத்து ஓங்க
தீந்தமிழர் சமய வாழ்வு செழிப்பு எய்த
சீதக் கமல முகச் செந்தமிழ்ச் செல்வி
திக்கெட்டும் புகழ் பரப்பிச் செய்த பணிகள் எத்தனை?

அன்புக்கு இலக்கணமாய் அகிலத்தில் வாழ்ந்து
அறிவிற்கு நல் ஆசானாய்
அகத்தினில் நிறைந்தீர்!
அரும் பெரும் சைவ சீலம்
அழிவது கண்டு அகமகிழ
அங்கெலாம் திருப்பணிகள்
ஆற்றி நின்ற அன்னையே!
அன்பொழுகப் பண்பொழுக
அவனியிலே நீங்கள் செய்த சேவை
ஆயிரமாயிரம் ஆண்டுகளானாலும்
அழியாது நிலைத்து நிற்கும்
அருமையான சேவை.

இந்து சமயத்தின் இமய விளக்காய்
எத்தனை எத்தனையோ இயற்பணி ஆற்றினீர்!

இந்துப் பணிக்காய் செல்வங்களை
இல்லையெனாது ஈந்திட்டீர்!
துர்க்காபுரத்தின் நாயகியாயிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றிசையும் பரந்திடவே
நற் தொண்டுகள் பல புரிந்தீர்
இல்லையெனாது ஈந்திடும் குணமும்
இன்முகமும் இன்மொழியும்
இன்ன பல பெருமைகளுடன்
எமக்கென நீவிர் சேவை செய்தீர்
உங்களை எப்படி நாம் மறப்போம்?

சிறுவர் அநாதையரின் திருத்தாபனமிருந்து
மகளிர் வாழ் இல்லச்சிறார்கள்
மகிழ்வுடன் வாழ மாபெரும் பணிகளாற்றி
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த அன்னையே!
சைவத்தமிழ் மேன்மையுறச்
சாற்றிய பணிகளோ பற்பல
ஊரெல்லாம் நின்று கூடி
உன் திருவுருவைக் காண
நீரெல்லாம் கண்கள் மல்க
நிற்பதை அறியாய் தாயே!

சித்தமதில் என்றுமே சிறப்பான
சிந்தனை கொண்டு
சிவப்பணியை மிகவும்
திறம்படச் செய்து காட்டியவரே!
சமூக சேவைகள் செய்து
சகல மக்களின் பாராட்டையும் பெற்றவரே!
மண்ணினிலே உயர்ந்த பெரும் பேறதனையே!
பார்போற்ற வாழ்ந்த தேசாபிமானியே!

கண்ணின் கருமணியாய்த் திகழ்ந்து
காலமெல்லாம் கருத்தான சேவை புரிந்து
மாண்புக்கோர் அச்சாணியாய்
வாழ்ந்து காட்டிய அன்னையே!
சொல்லாமல் போனதெங்கே
சொக்க நாதரிடம் தானோ!
சீரணி புகழ் விளக்காய்
சீமாட்டியே வாழுவீர் நீவிர்!
கண்ணுதலான் சிவன் கழலில்
உமது ஆத்மா கருத்தொன்றிச்
சிவபதத்தில் பெற்றிடுக சாந்தி.

புதுவைக்கவி — செல்வநாயகம் ரவீசாந்
வீரமலை, துப்பிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயமே உலகில் மேன்மை பெற்றது

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
பண்டிதை, தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

உலகத்திலே மிகப் பழமையானதும் உயிர்ப்புடையதானதும், ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான சமயமே எங்கள் சைவம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகம் முழுதும் சைவ சமயம் தழைத்தோங்கி இருந்தமைக்கு சான்றுகள் உண்டு. சிவலிங்க வழிபாடு இதற்கொரு எடுத்துக்காட்டாகும். மேலை நாட்டு அறிஞர்கள் பலர் எமது நாட்டின் சைவச் சிறப்பை உவந்து பாராட்டி உள்ளனர்.

சிவம் என்ற சொல்லுக்கு அர்த்தம் கூறுகின்ற அறிஞர்கள் முழுமுதற் பொருளும் திருவருட் சக்தியும் கூடியிருக்கின்ற பெருநிலையைக் காட்டுகின்றனர். 'சிவனெனும் நாமம் தனக்கேயுரிய செம்மேனி எம்மான்' என்று போற்றுகிறார் அப்பரடிகள். திருமுறை ஆசிரியர்களும், சித்தாந்த ஆசிரியர்களும் சைவத்தின் பெருமையை பலவாறாகப் போற்றி உள்ளனர். நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் எத்துணை இன்றியமையாததோ அதே போன்று சமயப் பற்றும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. ஒரு நாட்டின் நாகரீகமும், பண்பாடும், மொழிச்சிறப்பும் மேலோங்க வேண்டுமானால் அதில் சமய உணர்வு இழையோடி இருக்க வேண்டும். சங்க காலத்திலும், சங்கமருவிய காலத்திலும் மக்களிடையே காணப்பட்ட சைவ உணர்வு பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் மேலும் ஓங்கி விளங்கியது. காரைக்கால் அம்மையாரால் பாடப்பட்ட அருட் பாக்கள் அனைவருடைய உள்ளத்திலும் சமய உணர்ச்சியைத் தூண்டுகின்றது.

**"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்த நின் சேவடியே சேர்ந்தேன்"**

என்ற உறுதியான அருள் மொழியை எமக்குத் தருகிறார் காரைக்காலம்மையார். இவற்றைத் தொடர்ந்து நாயன்மார்களுடைய சைவ உணர்வையும், தேவாரத் திறனையும் நாம் காணுகிறோம்.

"தோடுடைய செவியன்" என்றும் "வீரட்டானத் துறை அம்மானே" என்றும் "பித்தாப்பிறை சூடி" என்றும் மூவர் தமிழும் இறைவனை நோக்கி விழிக்கின்ற பான்மையை 7ம், 8ம் நூற்றாண்டில் காண முடிந்தது. தமிழ்ப் பாடல்களை கேட்கும் விருப்பத்தில் சுந்தரமூர்த்தி நாயனர்க்கு "பித்தா" என்று அடி எடுத்துக் கொடுத்தவர் திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமான் அடுத்து தேனினும் இனிய திருவாசகம் எமக்குக் கிடைக்கின்றது. மணிவாசகப் பெருமான் சைவ உலகுக்கு வழங்கிய தேன் தமிழூற்று இதுவாகும்.

இவ்வாறு சைவ மறுமலர்ச்சி சோழர் காலத்திலும் எழுச்சியாக ஏற்பட்டமையால் எமக்குக் கிடைத்தது சேக்கிழார் பெருமான் தந்த பெரியபுராணம் ஆகும். கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகியவையும் சைவத்தின் அரும் பொக்கிஷங்களாக அமைந்தவை. தாயுமானசுவாமிகள் போன்ற அருட் பேரறிஞர்கள் பாடிய பாடல்கள் எமது உள்ளத்தை உருக்குகின்றன. சைவசமயமே சமயம் என்று அறுதியிட்டுக் கூறுகின்ற அன்னாரின் வைராக்கிய உள்ளத்தை நாம் போற்ற வேண்டும். அத்துடன் மனித நேயத்தையும், அனைத்துயிர்களிடத்தும் காட்டவேண்டிய கருணையையும் பல பாடல்களிலே அவர் வெளிப்படுத்துகின்றார்.

**"எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இரங்கவும்
நின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே"**

என்பன போன்ற பராபரக் கண்ணிப் பாடல்கள் அற்புதமான கருத்தை வெளிப்படுத்துவன.

சைவம் என்பது எமது மனதிலும், வாழ்விலும் உயர் நிலையைக் காட்ட வேண்டுமானால் எம் அனைவருக்கும் தொண்டு மனப்பான்மை அமைய வேண்டும். தொண்டு என்பது தன்னையும் வாழ்வித்து மற்றவர்களையும் வாழ்விக்கும் ஒரு தூய நெறியாகும். இதில் ஆடம்பரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமில்லை. தூய்மையும், அமைதியும் தொண்டர்களிடத்தில் இருக்க வேண்டும். தொண்டர்கள் கூட்டம் உண்மை, பொறுமை, நேர்மை, தெய்வ நம்பிக்கை ஆகியவற்றை தமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். இன்று எமது இளைஞர்கள் மத்தியில் கட்டளைகள் எழுந்து வண்ணம் இருக்கின்றன. இந்நிலைக்கு யார் பொறுப்பு என்பதனை உணரவேண்டிய நிலை சான்றோர்களுக்கு உண்டு. திரைப் படங்களினாலும், தொலைக்காட்சிகளாலும், தேவையற்ற சில சஞ்சிகையினாலும் மாணவர்கள் கெட்டுப்போகிறார்கள் என்று பலரும் பலவாறு சாற்றுகின்றனர். ஆனால் ஒழுக்கக் கேட்டை வளர்க்கும் திரைப்படங்களை எடுப்பவர்கள் யார்? தொலைக்காட்சிகளை இயக்குபவர்கள் யார்? சஞ்சிகைகளை வெளியிடுபவர்கள் யார்? இளைஞர்களும் இல்லை, மாணவர்களும் இல்லை. கொள்ளை இலாபம் அடிக்கும் செல்வச் சீமான்கள்தான் இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். 'கலியுகத்தின் அடையாளம் பார்ப்பானும் நாத்திகம் பேசுவான்' என்று தமிழகத்துச் சமயப் பெரியார் ஒருவர் கூறியது சிந்திக்கவேண்டியது. எனவே சமயம் என்பது வெறும் பேச்சும், பூச்சும் அல்ல என்பதும் அது தனி மனித வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் கட்டி ஆளும் கடவுள் தத்துவமும் என்பதும் நாம் உணர வேண்டிய கருத்தாகும்.

சைவசமயத்தில் பிறந்த நாம் ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தையே உயிராகப் போற்ற வேண்டும். இதற்காக நாம் உண்மைச் சமயிகளாக வாழப் பழக வேண்டும். பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சாத்திரங்களையும் நன்கு கற்கவேண்டும். தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதை வையகம் போற்ற வேண்டும். உலகம் முழுவதும் இன்று ஓங்கி நிற்கும் சைவ உணர்வு மேலும் மேலும் பிரகாசிக்க வழி காண வேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற கச்சியப்பருடைய வாக்கு திக்கெட்டும் ஒலிக்கட்டும்.

## அன்னையெனும் திருவே நீங்கள் எங்குடன் மறைந்தீரம்மா

அன்னை என்பதற் தாயே நீங்கள்
அறிவொளி அருளும் கல்வி மகள்
இன்றோ இதயம் [illegible]
இங்கெமது அன்னை பதம்சேர்ந் தீரோ?

நாளும் தமிழ்ச் சுவையினை தந்து
நற்றமிழ்ப் பாவைகள் அறிந்து மிதந்தும்
நீரும் தமிழோடு பெருமையை உரைக்கும்
தாயே தமிழினை மறந்தீர் ஏனோ?

சித்தநிறை கல்வி கற்பதற்கு ஊட்டி
சித்தாந்த ஞான தரக அம்மா
உலகநெறி கூறும் உயர் தமிழ் வாழ்வில்
செல்வியே நீங்கள் மறைந்தனை தீரோ?

அம்மா அழகுத் தமிழின் சிறந்தும்
அறுவகை சமய மாட்சியும் ஞானமும்
எல்லையைப் உரைத்துத் திறமது கண்டோர்
அவ்வளவும் உள்ளமே அழைத்தாளம்மா?

க. முகதேவன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எங்கள் தலைவி எங்கே!

நிறைவுக்கோர் நிலையமான எங்கள் தலைவி எங்கே?
நெடுமறைப் பொருளேயான எங்கள் தலைவி எங்கே!
துறைதொறும் சோதியான எங்கள் தலைவி எங்கே
தொல்லறம் காத்துவாழ்ந்த எங்கள் தலைவி எங்கே
இறையருள் ஆணையேற்ற எங்கள் தலைவி எங்கே
ஈழத்தின் ஆன்மீககாவலர் எங்கள் தலைவி எங்கே
துர்க்காபுரத்தின் காவல்நாயகி எங்கள் தலைவி எங்கே
தூயநற்பணி நற்றமிழரசி எங்கள் தலைவி எங்கே
அர்த்தமுள்ள இந்துமதத்தின் எங்கள் தலைவி எங்கே
ஆயிரமாயிரம் அறப்பணிகாத்த எங்கள் தலைவி எங்கே
ஏழைகளுக்கு ஏற்றம்காட்டிய எங்கள் தலைவி எங்கே
எழிலார் மகளிர்இல்லமாதரசி எங்கள் தலைவி எங்கே
வயோதிபர் இல்லத்தின்தாய் எங்கள் தலைவி எங்கே
வானுதல்கன்னி துர்க்கையின்பக்தை எங்கள் தலைவி எங்கே
பொங்கிடும் இன்னல்கள்போக்கிய எங்கள் தலைவி எங்கே
புதியதோர் வரலாற்றுநாயகி எங்கள் தலைவி எங்கே.

கவிமாமணி மதுரகவி. காரை எம்.பி அருளானந்தன். J.P
ஆசிரியர்,
ஸ்ரான்லிக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஈழத்துச் சிதம்பரம்



## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டு மயன் மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவு முன்றன் விருப்பன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org